விலை சதம் 75

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 | கார்த்திகை 29 | ஸபர் 15 | இதழ் 302

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 14-12-81

போலந்தில் அவசரநிலை

தொழிற்சங்கத்தலைவர்கள் கைது

வார்சோ, டிச 13

போலந்தில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. நாடெங்கும் நிர்வாகப் பொறுப்பை தேசிய மீட்பு இராணுவமன்றம் ஏற்றுள்ளது. தொழிற்சங்க தலைவர்கள் பலர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இதேசமயம் தொழிற்சங்க தலைவர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை செய்துவருவதாக கூறப்படுகிறது. ஆனால் தேசிய மீட்பு இராணுவநீதிமன்றம் சகல தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் தடைவிதித்து தொலைக்காட்சி வானொலி சேவைகளை கட்டுப்பாடுக்குள் கொண்டுவந்துள்ளது.

போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கத்தின் அலுவலகங்களைப் பொலிசார் முற்றுகையிட்டுள்ளதாகவும், பல தொழிற்சங்க தலைவர்களை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வார்சோவிலுள்ள சொலிடாரிற்றி தொழிற்சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற தாங்குதலொன்றை படத்து அவ்வலுவலகத்தை அதிரடிப் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு இருமணிநேர லீவு

(தொழுகை)

அரச அரசாங்க தனியார் நிறுவனங்களுக்கு கடமையாற்றும் முஸ்லிம் ஊழியர்களும் ஜும்மா தொழுகைக்காக வெள்ளிக்கிழமைகளில் 2 மணி நேரம் லீவு வழங்கப்படுகிறது.

★ கரங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை

மூன்றும் கட்ட வேலைத்தளம் பலிக்களமாக மாறுகிறது!

இளைஞர்கள்பலர் மரணம் பலர் படுகாயம்!

(நமது சிறப்பு நிருபர்)

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை மூன்றுவது கட்ட வேலைத் தளத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் பல மரணங்கள் அங்கு கடமையாற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது! இவ்வேலைத்தளம் ஒரு பலிக்களமாக மாறிவருவதாக அங்கு வேலைசெய்பவர்கள் அஞ்சுகின்றனர்!

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 3வது கட்டவேலைத்தளத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களில் சிலர் விபத்துக்களில் சிக்கி மரணமடைந்துள்ளனர். பலர் படுகாயமடைந்து அதனிமூலம் ஊனமுற்றுள்ளனர். இந்த தொழிற்சாலையின் 3ம் கட்டப் பகுதி வேலைகள் கொடக்கில காலத்திலிருந்தே இந்த அவலச் சம்பவங்கள் நிகழ்ந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிலகங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களினூடாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமே ஆயிரக்கணக்கில் ஒப்பந்த அடிப்படையில் இப்பகுதியில் வேலைசெய்கிறார்கள். இவர்களுக்கு மரணம் ஏற்படுகிறபோதோ அல்லது விபத்துக்கள் நிகழ்ந்தாலோ தொழிலகங்களின் மூலமாகவோ சங்கங்கள் மூலமாகவோ நிவாரணம் வழங்கப்படுவதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தங்கள் உயிரைப் பணயமாக வைத்துக் கொண்டு சுமார் 150 அடிக்கு மேல் நின்றுகொண்டு வேலைகள் செய்கிறார்கள் என்றும் மாடி வேலைசெய்யும் அதிகமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றும், தற்பாதுகாப்பு சாதனங்கள் இல்லாமலே இவர்கள் இரவுபகலாக மாடிக் கட்டடங்களில் வேலைசெய்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

இதுவரை, மின்சாரம் தாக்குவதும், கடமையிலிருக்கும் போது தாக்குதடிகள் பலவைகள் முறிந்தும், தவறிவிழுந்தும் பலர் மரணமடைந்துள்ளனர். பலர் ஊனமுற்றும் உள்ளனர்.

இதுசம்பந்தமாக யாழ் மாவட்ட அபிவிருத்திசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அதிக பணம் உழைக்லாம் என்ற நப்பாசையில் இளைஞர்களும் குடும்பஸ்தர்களும்

(8-ம் பக்கம் பார்க்க)

லயனல் குழு விசாரணை:

யோகேஸ், பண்டிதர் இன்று சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் நிகழ்ந்த வன்செயல்களால் ஏற்படட நஷ்டங்கள் குறித்து நடைபெற்ற லயனல் குழு விசாரணைகள் இன்று மீண்டும் பூர்த்தி பெறுகின்றன.

திருகோணமலை அரசாங்க அதிபருக்கு, நஷ்டஈடுக்குழுத் தலைவரான திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில், யாழ் செயலகத்தில் இவ்விசாரணைகள் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

எரிக்கப்பட்ட தமிழர்விடுதலைக்கூட்டணித் காரியாலய விசாரணைகள் இன்றுகாலை நடைபெறுகிறது. கூட்டணியின் நிர்வாக (அமைப்புச்செயலாளரும், ஊர்காவற்றுறை எம்.பியுமான பண்டிதர்

(8-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. புதிய செயலாளர் நாளை பதவிப் பிரமாணம்

நியூயோர்க், டிச 13

ஐ.நா.வின் புதிய பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட பெருநாட்டைச் சேர்ந்தவரான திரு பெரஸ்டிகியூலர் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பதவிப்பிரமாணம் செய்வார்.

157 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் பதவிப்பிரமாணம் செய்துவிடுவார். இவரின் தெரிவை சபை அங்கீகரிக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

ஐ.நா.வின் புதிய செயலாளராக திரு பெரஸ்ட்ரோயிகா தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டி ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் கூறாநிதி வால்ட்ஹெய்ம் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (வெ)

மனித உரிமைகள் தினம்

அறவழி போராட்டக்குழு ஒருநாள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினத்தையிட்டு அறவழிப் போராட்டக் குழுவினர் நல்லூர் செல்வா நினைவாலயத்தைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்தனர்.

அறவழிப் போராட்டக் குழுவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட குழுச் செயலாளர் திருவாளர்கள் ஜீவதாஸ், வி ஜி தங்கவேல், வி சு துரைராஜா ஆகிய மூவரும் ஒன்றரை தினம் 8 மணி தொடக்கம் 4 மணி வரை மௌனப் பிரார்த்தனையுடன் உண்ணாவிரதம் இருந்தனர்.

யாழ் மாநகரசபை முதல்வர் திரு இராசா விஜயநாதன், யாழ் மாவட்டசபை உறுப்பினர் திரு நடேசு இராஜேந்திரன் ஆகியோர் சிரமதானிகளின் நலன்களைக் கவனித்தனர்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு துவைத்தலிங்கம் சிரமதானிகளுக்கு பிஸ்கட்டுகளையும், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரின் செயலாளர் திரு விநாயகமூர்த்தி பானங்களையும் வழங்கினார்கள். தொழிலதிபர் திருக்கனகராசா பணவுதவி நிழற்தரும் மரக் கன்றுகளை நாட்டினார். (மா)

வெள்ள அகதிகள்.

நல். ப.நோ.கூ.ச. ரூ. 1000 உதவி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வெள்ள அகதிகளுக்கு நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

இந்த நிவாரணப்பணம் இன்று நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ்.சபாபதிப்பிள்ளையிடம் கையளிக்கப்படும்.

★ யாழ். நகரில் நேற்றுக் காலை

ரூ. 1,25,000 பீடி இலை சிக்கியது!

ரூ.16,000 அபராதம், லொறியும் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

ஒரு லட்சத்து 25 ஆயிரம் பெறுமதியான பீடிஇலை மூடைகளை லொறியுடன் ஏற்றிக்கொண்டு வந்த மூவர் யாழ் பொலிசாரிடம் நேற்றுக்காலை சிக்கிக்கொண்டனர்!

யாழ்ப்பாணம் கொக்குவிலிலிருந்து யாழ்பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவைச்சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குரூப், சார்ஜன்ட் ஜேசுதாசன், பொலிஸ்உத்தியோகத்தர்கள் ரி. அருச்சுனன், தருமராஜா, பெர்னாண்டோ ஆகியோரடங்கிய பொலிஸ்குழுவினர் பீடிஇலைமூடைகள் கொண்டுவந்த லொறியை நடுத்துவழிமறித்து சாரதி உட்பட மூவரையும் கைதுசெய்து யாழ் உதவி அரசாங்க சேரிப்பாளர் திரு. எஸ். எம். தே. சென்னிலரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு தனித்தனியாக வெவ்வேறு பதினாறாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பீடிஇலைமூடைகளையும் லொறியையும் பறிமுதல்செய்யும்படி உத்தரவிடப்பட்டது. (மா)

பாணந்துறை எம்.பி. சுகயீனம்

'யோகேஸ்' நவம் ஆறுதல் கூறினர்

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் பாணந்துறை எம்.பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோவை யாழ்ப்பாண எம்.பி திரு வெ. யோகேஸ்வரனும் சாவகச்சேரி எம்.பி. திரு.வி.எம். நடராஜனும் சென்று பார்த்து ஆறுதல் கூறினர். (மா)

மணிவாக்கு

வெப்பம், வெறுப்பு, அச்சம்- இவை மூன்றும் நம்மிடம் உள்ளவரையிலும் நமக்கு ஈசுவரதரிசனம் கிடைக்காது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

நமது நோக்கு

காட்டு வளம்

தவிர்க்கமுடியாத முறையில் துன்பம் மனிதனுக்குப் பாடம் புகட்டிக் கொண்டிருக்கிறது.

நிலவிற்கு ஒளியும் வளர்ச்சிக்குத் தேவையாயிருக்கும் நிலத்தையும், நீரையும், காற்றையும் வெளிச்சத்தையும் இயற்கை நல்கி விடுகிறது. சமூகத்துக்குப் பயன்படும் வேளாண்திட்டத்திற்கு வேண்டிய வசதிகளையும் இயற்கை இனிது அளித்து விடுகிறது.

இதனை மறந்து நாம் இன்றைய நாகரிக வாழ்வில், மரமொன்றுமரடமாளிகைக்கு அமைப்பதற்கும் அற்ற அழகு ஊட்டத் வேண்டிய தளபாடங்களுக்கும் காட்டின் செல்வங்களாகிய மரங்களை களவாக வெட்டுகின்றோம். காடு அழிவுக் குள்ளாகின்றது. கேட்பாரிலாததால் இந்த ஆட்டுமிடம் தொடர்கின்றது.

இயற்கை அன்னை சீற்றம் அடைகின்றாள்: மாதம் மும்மாரி பொழிவதற்குப்பதிலாக வருடம் ஒன்றுக்கு ஒரு மாரியே பொழிவதில்லை! வறட்சியால் உயிரினங்கள் மடிகின்றமல்ல காடே அழிகின்றது!

உலக ரீதியில் வறட்சி விவசாயத்துக்கு தீங்கு விளைவிப்பதால் உலகின் பெரும் பாகங்கள் பட்டினியால் அவஸ்தைப்பட்டதை நாம் அறிந்திருக்கிறோம்.

புவியியல் - மண்வளக் சுவாதிய ஆராய்ச்சியெனலாம் தடுபுடனாக நடைபெற்றன முடிவில் சாதாரண காட்டுமனிதன் இயல்பாக அறிந்த உண்மையையே இம்மேலாராய்ச்சிகள் பெலப்படுத்தின: காடுகள் அழிக்கப்படுவதால் பருவகாழை பெய்வதில்லை.

விஞ்ஞானம் இவ்விதம் முடிவுகளிட மெய்ஞ்ஞானம் காரி ஆண்டவன் படைப்பு, அதனை அழிக்க முயல்பவர் நாமடை அழிகின்றனர்'' என்று அறிவுறுத்துகின்றது.

"காடு ஆண்டவன் படைப்பு" என்ற ஆடிப் படை நம்பிக்கையிற் எழுந்த ஆங்கில இலக்கியம். இலக்கியத்தின் காடுகளை மையமாகக் கொண்டவை. ஆங்கில இலக்கியம் கலைத்த இலங்கையருள், ஆங்கில இலக்கியத்தில் உயர் இடம்பெறுகின்றனர்களிலர். இங்கு அரசாங்க அதிபராக கடமை புரிந்த வூல்ப் (Woolf) என்பவர் எழுதிய ''காட்டின் ஓர் கிராமம்'' என்ற அரும் பெரும்நாவலை வாசியாதார் எவரும் இருக்க மாட்டார்.

அவரைப்போன்ற மற்றவர் ஜோன்ஸ்ரின் எழுதிய "காட்டுவெள்ளம்" Jungle tide, டாக்டர் கிபிற்றென், டாக்டர் அன்டிரேயாள் றெல் போன்ற அறிஞர்கள் "காட்டுச்செல்வம்" நம்முன் ஓர் நமக்களித்த நாடுச் செல்வம்'' என்ற கருத்தைக் கொண்டு அருமையான இலக்கியத்தைப் படைத்தனர்.

இம்மானிடர் அனைவரும் இந்நாட்டுப் பண்பாட்டின் பிறந்தவரோ வளர்ந்தவரோ அல்லர் என்பது சிந்தனைக்குரியது. அவர்களுக்கே எந்த நாட்டின் செல்வத்தின் முக்கிய பகுதி காட்டு வளம்என்ற கருத்து நன்றாக மனதைக்கவர்ந்திருக்கிறது. கவனிக்கும் இங்கு பிறந்தவளர்ந்த எமக்கு இது எளிதில் புலப்படுவதில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், மேற்கத்திய நாகரிகம் - இவை மூன்றும் இந்நாட்டின் காட்டுவளப்பத்தை நன்றாகப் பேணவில்லை. சட்டதிட்டங்கள் திருந்த போதும் காடுகள் இந்நாட்டின் செல்வங்கள் என்ற ஆத்மிக உணர்வு அவர்களுக்கு புரியுமென்று எங்களம் எதிர்பார்க்கலாம்? இதற்கு புறநடையானவர்களை நாம் மேலே குறிப்பிட்ட ஆங்கில நாவலாசிரியர்கள்.

சுதந்திர இலங்கையில் இன்றைய அரசு, வெட்டின காட்டை வளர்க்க முயற்சிக்கின்றது.

மனிதனுக்கு உணவு அவசியமென்பதால் காட்டை வெட்டி சமஞ் செய்யும் திட்டத்தில் இறங்கின அரசு, அனுவசியமாக மனிதன் தன் ஆடம்பர வாழ்வுக்கு காடுவெட்டட்டுமல்ல அங்குள்ள மிருகம் பறவை போன்ற உயிரினங்களையும் அழிக்கின்றான் என்பதை நாம் தாழ்த்தியாவது உணர்ந்திருக்கிறது.

இயற்கைக்கு அன்னையின் ஆட்சியின்மகத்துவத்தையறியும் ஆற்றல் இல்லாதோராக, அழிந்த காடுகளின் வளர்ச்சியை அரசாத் தீண்ட வைத்திருக்கிறது.

நீர் வீழ்ச்சியை மின்சாதி உற்பத்திக்கைப் பெருக்கவும் மிதமுஞ்சிய சக்தியை இந்தியாவுக்கு விற்கவும் கண்ட அரசு, கழுமுயிகளாமையால் பட்டபாடு ஆடிக்கடி இருளில் (இருவகை) மூழ்கியிருந்த அனைவருக்கும் நன்கு புரியும்.

தெற்கில் கம்பிறப்பிடியா வெள்ளமென்னவெள்ளவடக்கில் கிளிநொச்சியெனறுவெள்ளம், நாட்டு மிகுத்திக்கு காட்டிவளம் இன்றியமையாததென அறிக.

விவசாயத்துக்கு முதலிடம் கொடுக்கவேண்டிய மக்கள் அரசின் காடு வளர்க்கும் திட்டத்துக்கு தாராளமான ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஆசிரிய சமுதாயத்தில் பெண்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்

பெண் ஆசிரியைகள் கருத்தரங்கில் கோப்பாய் ஆசிரியகலாசாலை அதிபர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனக். பிரிவின ஈபேரிட் மன்றம் என்பவற்றுடன் இணைந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பெண் ஆசிரியைகளுக்கான கருத்தரங்கொன்றினை "இலங்கையில் பெண் ஆசிரியைகளுக்கான அந்தஸ்து" என்ற தலைப்பில் வாழ் வசாவிழான் மத்திய கல்லூரி நிலையத்தில் 11ம் திகதிமுதல் 14ம் திகதி வரை நடாத்தின்றது.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா வைபவம் இ. த. ஆ. சங்கத்தின் தலைவர் திரு. டி. எஸ். சே. வணசிங்க தலைமையில் ஆரம்பமானது கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திருமதி இ. குமாரசாமி துக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கருத்துரையை ஆற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்தவைத்தார்.

தலைவர் திரு. வணசிங்க தமது தலைமை உரையில் கூறியதாவது:

"ஆசிரிய தொழிற்சங்க வரலாற்றில் பெண்களுக்கான ஒரு கருத்தரங்கு நடத்துவது மானிடம் வெளிவிடப்படுத்தைகளை இலாதாரிகள் கூட ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படு நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மை வெளிந்துள்ளது. இவ்வடியான நிலை தவிர்க்கப்பட்டு புதிய முறையில் தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்பட முடியும்'' என்றார்.

பிரதம அதிதி திருமதி இ. ஆனந்தகுமாரசாமி ஆசியுரை ஆற்றுகையில்; "பெண்கள் ஆசிரிய சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும். ஆண்கள் துணையின்றி அவர்கள் எக்காரியத்தையும் செய்யத்துணியவேண்டும். கஷ்டப்பிரதேசங்களுக்கெல்லாம் கூடத் தனித்துச் சென்று கடமையாற்ற வல்லமை பெற வேண்டும். ஆசிரிய சமுதாயத்திலுள்ள 60சதவீதமான பெண்களும் மனது வைத்தால் உயர்ந்த ஒரு தரத்தினை நிலைநாட்டி விடமுடியும். மேல் நாடுகளைப் போல் இங்கும் ஆசிரிய தொழிலுக்கு இலயபான வர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். பெண் சமுதாயத்தில் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டும் சமுதாயச் சீர்கேடுகள் மாணவர் மனதில் பதியும்படி உணர்த்தி வருங்காலச் சமுதாயத்தைச் சீர்படுத்த உதவ வேண்டும். நாமும் சீர்திருத்தவாதிகளாக எமக்கமக் காட்டி சமுதாயத்தையும் அவ்வழியில் இட்டுச் செல்லவேண்டும். மேல்நாடுகளில் ஆசிரிய சங்கங்களின் மூலமாகவே கல்விச் சீர்திருத்தங்கள், பரீட்சை சம்பந்தமான விடயங்கள் யாவும் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கும் அவ்வாறான நடைமுறைகள் மேற்கொள்ளப்படின் சிறப்பானதாக அமையும். பெண்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தங்கள் ஈடுபடுத்தி கொள்ளவேண்டும். பெண்கள் தயக்கமின்றி நல்ல பல காரியங்களில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு தமது பங்கினை அளிக்கவேண்டும்'' என்றார்.

ஆசியுரை வழங்கிய யாழ் தொழில் ஆணையாளர் திரு. ஏ. மகாசிவம் பேசுகையில் "உலகம் முழுவதிலும் தொழிற் சங்கம் சமூகப் பொருளாதார விடயங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. வாக்கு, கார்ல் மார்க்ஸ் பின்னணியில் இன்றைய தொழிற் சங்கங்கள் தமது கொள்கையை வகுத்து இயங்கி வருகின்றன. எம்நாட்டு ஆசிரிய தொழிலுக்கு இலயபான வர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். பெண் சமுதாயத்தில் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட வேண்டும் சமுதாயச் சீர்கேடுகள் மாணவர் மனதில் பதியும்படி உணர்த்தி வருங்காலச் சமுதாயத்தைச் சீர்படுத்த உதவ வேண்டும். நாமும் சீர்திருத்தவாதிகளாக எமக்கமக் காட்டி சமுதாயத்தையும் அவ்வழியில் இட்டுச் செல்லவேண்டும். மேல்நாடுகளில் ஆசிரிய சங்கங்களின் மூலமாகவே கல்விச் சீர்திருத்தங்கள், பரீட்சை சம்பந்தமான விடயங்கள் யாவும் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கும் அவ்வாறான நடைமுறைகள் மேற்கொள்ளப்படின் சிறப்பானதாக அமையும். பெண்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தங்கள் ஈடுபடுத்தி கொள்ளவேண்டும். பெண்கள் தயக்கமின்றி நல்ல பல காரியங்களில் ஈடுபட்டு சமுதாயத்திற்கு தமது பங்கினை அளிக்கவேண்டும்'' என்றார்.

"ஆசிரிய தொழிற்சங்க வரலாற்றில் ஒரு சாதனை"

இதுவே முதல் நடவடிக்கையாகும். இதனை இ. த. ஆ. சங்கம் நடத்துவதில் நான் பெருமை அடைகிறேன். ஆசிரிய சமுதாயத்தில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள் கடமையாற்றுகின்றனர். இன்று எல்லாத்துறைகளிலும் பெண்கள் பெருகிவரவு ஈடுபாடு கொண்டுள்ளனர். விடுதலை இயக்கங்களில் கூட பெண்கள் பெரும் பங்கு வகித்துள்ளனர். முதலாவது பெண் பிரதமமந்திரிகூட இலங்கையிலிருந்தான் தெரிவு செய்யப்பட்டார் என்பதை ஆசிரிய சங்க சம்மேளனத்தின் தலைவியாகவும், ருஷ்ய ஆசிரிய சங்கத் தலைவியாகவும் பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப் பெண் ஆசிரியைகளுக்கான பிரதம அதிதியாகக் கலந்து ஆரம்பித்தவைக்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி தெரிவு செய்யப்பட்டது மிகவும் பொருத்தமானதாகும். எத்தனையோ விடயத்திற்கும் மிகவும் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அத்தகையவர்களை ஆசிரியர்களை தெரிவு செய்யக் கையாளப்படும்முறை வரவேற்கக்கூடிய ஒன்றாகும். க. பொ. த (உ. நி) சித்தி பெற்றவர்கள் பொதுப் பரீட்சை ஒன்றின்மூலம் ஆசிரியத்தலைவர்களால் தெரிவு செய்யப்படவேண்டும். கணக்காய்வாளர்கள் அறிக்கையின்படி கடந்த காலங்களில் வர்த்தக கடமைகளை நாம் செய்யத்தானாக எந்த வருவாய் தாமே களுக்கு. என்ற கோட்டுக்கமைய உரிமை கடமையை உணர்ந்து செய்ய வேண்டும். நாடு நமக்கு என்ன செய்தது? தலைவி தாமே கேட்டுச் செயற்படின் சகல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்படும்'' என்றார்

இ. தொ. கல்விப் பிரிவு இயக்குனர் திரு. வி. நாகலிங்கம் தமது உரையில், "ஆசிரிய சேவை சமூக சேவையா? தொழிலா? அல்லது இரண்டுமா? அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மாற்றப் இப்படியான நிலையில் சிந்தனை வேண்டியவர்களாகப்பட்டுள்ளோம். அன்று கேலிநாடகம் என்றாக எந்த ஒரு அரசுடையது, நடுக்கிய நிலை இருந்தது. ஆனால் இன்று வேலைநிறுத்தக்காரர்கள் வீடுகளை அனுப்பப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். கேலி இலாப் பிரச்சனை, கல்விருத்தி என்பதற்றிருலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களுடைய சமுதாயத்தோடு கொடர்ந்த அதிக எனவே சமுதாய சீர்திருத்தங்கள் ஆசிரியர்களால் மூலமாகவே ஏற்படுத்த முடியும்'' என்றார்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கல்வி, கலாசாரச் செயலாளர் திரு ஆ. க. மாணிக்கம் உரையாற்றுகையில் "பெண் ஆசிரியைகள் கடமையுணர்வுடன் செயற்படின் சமுதாயத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்த முடியும். ஆண்களுக்குப் பெண்கள் சகல துறைகளிலும் சமமானவர்கள் என்று நிரூபித்தல்வேண்டும்.'' என்றார்.

இ. த. ஆ. ச. பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் உரையாற்றுகையில் "நான் சர்வதேச சுதந்திர ஆசிரிய சங்க சம்மேளனத்தில் கடந்த வருடம் தான் அங்கத்துவம் பெற்றோம் எனினும் குறுகிய காலத்துக்குள் பலவடைச் பெறுமதியான உதவிகளைப் பெற்றுள்ளோம். முதற்கட்டமாக ஆண் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இப்போது பெண் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நடாத்தப்படுகின்றது. சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம் ஒரு பணக்கார கொம்பனி அல்ல. இந்நிறுவனம் பிரசிரிக் ஈபேர்ட் மன்றம் செய்யும் நிதி உதவியை கொண்டே பல பாரிய பணிகளை செய்து வருகின்றது. எனவே நாம் அவர்கள் தரும் நிதியினை ஆக்கபூர்வமான பணிகளில் செலவழித்து பயன்பெற வேண்டும்.'' என்றார்.

பாரதிக்கு இமயம் தலை; குமரி கால்; வேலும் சூலமும் இருவிழிகள்!

பாரதி நூற்றாண்டு விழா நேற்றுக்காலை சென்னையில் கோலாகலமாக ஆரம்பமானதையொட்டி சென்னை வானொலியினர் அறுகோணக் கவிபரங்கு ஒன்றை "பாரதி இன்று பாடினால்" எனும் தலைப்பில் நடாத்தினர். டாக்டர் அரன் சிங்கார வேலன் தலைமையில் நடைபெற்ற இக் கவியரங்கின் இனிமைதரு சொல் மதுத்துளிகளின் சிதறல்களில் சிலவற்றை இங்கு தொகுத்துத் தருகிறேன்.

மீசைத்தடை மீறிய தமிழ்

"பாரதிக்கு இமயம் தலை. குமரி கால். கதிரவனின் வேலும் காளியின் சூலமும் இரு விழிகள் சுதந்திரம் சொழுப்பு, பாரதம் பாரதம் என்பது இதயத் துடிப்பு'' இவ்வாறு பாரதியின் உடலையே பாரதியின் உளர்வுகளின் தொகுப்பாக வர்ணித்த கே. எஸ் அருணாசலம் "எந்தன் பரமனை இன்றும் தொடருதா" என எண்ணி மகிழும் பாரதி நான் பாடினவைகளையே இவ்வளவு காலத்திற்கு பிறகும் "மீண்டும் பாடிட மேடை அமைப்பதா" என வலியுறுவான் எனக் கூறி வைத்தார்.

பூவட்ட விழிகள் தீவட்டி ஏந்துதல்

பெண் விடுதலைபற்றி கவி தொடுத்த சக்தி கனகலிங்கம் "பூவட்ட விழிஞர் தீவட்டி ஏந்துக" எனக் கவிதொடுத்த பாரதியின் கவிதை "மதுத்துளிச் சிதறல் புதுக் கவிச் சிலிர்ப்பு'' என வர்ணித்து "தமிழழகும் விடுதலை தூங்கிடச் சொல்லினாள் நான் தாலாட்டுப் பாடினேன்'' என பாரதி கேட்பானென முடித்தார்.

சமதர்ம முல்லை

தொழிலாளி பற்றி கருத்தாளப்பன் கவி வடிவிலையில் "சங்கத்தமிழ் எடுத்து சமதர்ம முல்லை மலரவைத்த'' மகாகவிபாரதி என்றும் கருப்பையில் பாரதத்தாய் சுமந்த கனவு'' பாரதி என்றும் பிறமொழிச்சொற்களை தமிழில் கலப்புற விடுதல் பாவமென்றும் கூறினார்.

மனித மனசாட்சியின் சிறைமீட்பு

சிறைகிடக்கும் மனித மனச்சாட்சியை மீட்டெடுக்க பாடினவைத்த ''பாரதி நூற்றாண்டு விழா நடைபெறும் இவ்வேளையில் கூட' ''சாதிமதவேற்றுமை சலனிகை கடிந்து வீதியிலே வர்ணம் விடுவது' வேதனை என்ற அருள் நாவலிங்கம் ஏழுசுரங்களுக்காக பாடப்பாடாது ஏழ்மைசுரம் தணிக்க பாடினவைத்தவன் பாரதி'' என்றார்.

— பற்றிமாகரன்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர் வேலைநிறுத்தம் நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் கூட்டுத்தாபன நிர்வாகத்திற்கு காலக்கெடுவை தொடர்ந்து வேலைக் குறிப்பியும் அவர்களின் கோரிக்கைகள் தீர்க்கப்படாத நிலையில் கடந்த நவம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் கடந்த அக்டோபர் மாதம் 30ம் திகதியிலிருந்து நவம்பர் 23ம் திகதி வரை தொழிற்சாலை வாயடைப்பிரதேசங்களில் கூட்டுத்தாபன நிர்வாகம் கடந்த நவம்பர் மாதம் 25ம் திகதி காலை 8 மணிக்கு முன் சகல ஊழியர்களையும் வேலைக்குத் திரும்பும்படி காலக்கெடு விதித்திருந்தது.

கடந்த வியாழக்கிழமை 10ம் திகதி நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் பிரகடன தினத்தை முன்னிட்டு இவ்ஊழியர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சம்மேளனங்களில் பிரசாரக் கூட்டமும் பரந்தன் கோரக்கன்கட்டு கிளையர் ஆலயத்திலும், செயலகத்திலும் வழிபாடு நடத்தினர்.

"ஏற்கனவே வேலைநிறுத்தம் செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியாளர்களை வேலையில் மீண்டும் அமர்த்தல், தொழிற்சங்கப் பிரதேசத்துள் அமைந்திருந்த தொழிற்சங்க அலுவலகங்களை மீளமைத்தல் தொழிற்சங்க உத்தியோகத்தரொருவர் கொலைபிற்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தரவை ரத்துச் செய்தல் 1981 நவம்பர் 4ம் திகதி ஏற்படுத்தப்பட்ட முன்னாள் நடந்த கிடிப் பட்டியில் வேலை அமர்த்தப் பட்டிருத்தல் 1981 நவம்பர் 19ம் திகதி கூட்டுத்தாபன நிர்வாகம் விடுத்த அறிவித்தலுக்கு இணங்க வேலைக்குத் திரும்பிய பொழுது வேலை மறுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மீளவும் வேலை வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் மீண்டும் ஈடுபட்டுள்ளார்கள். (வெ)

ஐ. நா. சபையின் ஒரு நெருக்கடி தீர்ந்தது!

நியூயோர்க், டிச. 13

ஐ. நா. சபையில் புதிய பொதுச்செயலாளரை பெரு நாட்டவரான நிரு பெரெஸ் டி கூயர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதன் தொடர்ந்து இதுவரையிலும் இது தொடர்பாக இருந்துவந்த நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

61 வயதான இவர் தனது பதவியை ஜனவரி முதலாந் திகதி ஐ. நா. வின் முன்னாள் பொதுச்செயலாளர் கூர்ட் வால்ட்ஹைம் விடமிருந்து பொறுப்பேற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பதவிக்கு ஆரம்பத்தில் ஐ. நா. வின் முன்னாள் செயலாளர் கூர்ட் வால்ட்ஹைம் முயன்றும், சர்வதேச வெளி நாடுகளைச் சார் ஜனாப் சாலிக் அலைட்டிக்குமிடையே ஏற்பட்ட நீண்டகால நிலைபேற்றைத் தொடர்ந்து இவ்விருவரும் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றதன் தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து இப்பதவிக்குப் போட்டியிட்ட ஏழு பேர்களிலும்பொதுச் செயலாளர் நிரு பெரெஸ் டி கூயரின் பெயர் மட்டுமே ஐ. நா. பாதுகாப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

ஐ. நா. வின் புதிய செயலாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ள பெல்ரு நாட்டு ஆப்ரிக்கா விவகாரம் சம்பந்தமாக முன்னாள் செயலாளர் வால்ட்ஹைம் விசேட பிரதிநிதியாக கடமையாற்றினார். (வெ)

ஆய்வுகூட சேவையாளர்

யாழ். மாவட்டப் பாடசாலை ஆய்வு கூடங்களில் பணியாற்றுவதற்கான ஆய்வு கூட சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கல்லூரியில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு 15 விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 12 பேரே சமுகமளித்தனர்.

இவர்களில் பத்துப்பேர் தெரிவு செய்யப்படவிருந்த போதிலும் ஏழுபேரே தகுதியுடையவர்களாகக் காணப்பட்டனர் என்று தெரிய வருகிறது (உடுவை. நிரு.)

ஜேப்படி ஆசாமி கைது

(சுன்னாகம்)

"இரு கிராம பொலிஸ்ப் பாரக்கச் சென்றனர், கியூவில் நின்றபோது தனது மணிப்பர்சை பறிகொடுத்தார் ஆனால் அங்கு ஒழுங்கிலிருந்த பாரக்க வந்த 'ஜேப்படி' பேர்வழியை கடக்கிப்பிடித்துடிய வாடம் "மணிப்பர்சை" ஒப்படைத்தனர்.

இச் சம்பவம் சினிமா ரசிகர்களின் மூக்கடி கியூ வரிசையில் இடம் பெற்றது.

"இரகசிய பொலிசார்" சினிமாப்பட்டம் பார்க்க மூக்கடி கியூவில் நின்ற போது தனது சட்டைப் பையில் இருந்த மணிப்பர்சை "ஜேப்படி" செய்தவரை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். ஏ. டபிள்யூ. சிங்கோ என்பவர் யாழ். பொலிசில் செய்த கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து யாழ். பொலிசார் சந்தேகநபர் மீது வழக்கு செய்யப்பட்ட ஹெட்டி ஆரச்சிகே அல்ரன் என்பவரைக் கைது செய்து யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். யாழ் நீதிமன்ற நீதிபதி திரு ரி. ஜேசநாதன் சந்தேக நபரை இருவார விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சீனப்படை நவீனம்: 100 கோடி டாலர் செலவு

லண்டன், டிச. 13

"கடந்த ஒன்பது மாதத்தில் சீனாவில் மொத்த தொழிற்துறை உற்பத்தி 1.5 சதவீதத்தால் கட்டுமே உயர்ந்துள்ளது. ஜனவரிக்குள் தொழிற்துறை உற்பத்தியில் ஏதும் மாற்றமேற்படாதுவிடின் 1981ம் ஆண்டு உற்பத்தியில் குறைவானதாகவே இருக்கும்" என்று இங்கிருந்தவெளியாகும் "கொன்சிரேன் ரிபோ" என்ற பத்திரிகை எழுதுகிறது.

"கனரக இயந்திர தொழிற்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி எச்சரிக்கை செய்ய தாகவுமுள்ளது. கனரக இயந்திர தொழிற்துறையில் 7.4 சதவீதமும் எண்ணெய் உற்பத்தியில் 5.2 சதவீதமும், நிலக்கரி உற்பத்தியில் 5.6 சதவீதமும் உருக்கு உலோக உற்பத்தியில் 6.5 சதவீதமும், டிராக்டர் உற்பத்தி பாதியாகவும், வாகன உற்பத்தியில் 19.8 சதவீதமும், இயந்திர உபகரணங்களில் 19.7 சதவீதமும், ரசாயன உரவகையில் 3.9 சதவீதமும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது கனரக இயந்திரத்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நாட்டின் பொருளாதாரத்துப் பெருமளவில் பாதிப்பதாகவுள்ளது" என்று பத்திரிகை எழுதுகிறது.

"சோவியத் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சீர்கேடுகளுக்கு காரணம், பொதுவாக எல்லாரும் உபகரணங்களுக்கு அதிகமாகவே இரும்பைத்தான். இந்த கொடுக்கை கனரக இயந்திரத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சாத்தியமாகிறது.

ராணுவச் செலவுக்கு அதிகரித்துவருவதாலேயே பிரதான பொருளாதாரத்துக்கு காரணம் என்றால், 90 பவுட் ஏவுகணை நவீனமயமாக்க 100 கோடி டாலர்ச் செலவு செய்யப்பட்டுள்ளது" என்று "கொன்சிரேன் ரிபோ" எழுதியுள்ளது.

நெல்லியடியில் இப்படியும் நடக்கிறது!

(உடுப்பிட்டி)

நெல்லியடியில் அண்மையில் நடந்த [கேஷ்டி சண்டை ஒன்று காரணமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தது.

கல்வெட்டி மாநிலக் கிராமத்தைச் சேர்ந்த இரு கேஷ்டி வீரர்களும் நடுவே ஆயுதமாகிய சண்டை நடந்து கொண்டிருந்தது. இச்சமயம் அதிகாலை சுல்லிட்டதிற்கு ஜீப்பில் வந்து பார்த்தவுடன் பொலிசாரைக் கண்டதும் ஒரு கேஷ்டியினர் தங்கள் காரில் நிமிர்ந்து புறப்பட்டு வேகமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

அவ்வேளையில் காரணமாக வந்த காரைவிட்டு பிடிக்க ஆயத்தமாக்கப்பட்டனர். மற்றக் கேஷ்டி வீரரைப் பொலிசார் தரதரத்துச் சென்றபோது அவர்களில் ஒருவர் தலைவர் கல்லை நிலையம் ஒன்றில் வாகனம் ஓடிச்சென்ற போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தரைக் கடைப்பிடித்து கொண்டார்.

இந்நிலையில் பிரதேச காரணமாக அந்நிலையிலிருந்து கொண்டிருந்த வாகனங்கள் பலவற்றை கூட்டுறவிட்டனர்.

தரதரத்துச்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் காயமுற்றதோடு நிலைமை விழ தரதரப்பட்டவர் மதிக்க ஒருவர் மயக்கமடைந்து விட்டார்.

இவ்வித சம்பவங்கள் அடுக்கடி இப்பகுதியில் நடந்து கொண்டிருப்பதால் தென்மேற்கு பகுதியில் பெண்கள், மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் விதியில் போக்குவரத்துச் செய்வது சிரமமாகவுள்ளது.

மீனவர் தினவிழா

(மன்னார்)

மன்னார் மாவட்டம் [ஜனவரி மாதம் மீனவர் தினவிழா நடைபெறுவது இதுதான் நடவடிக்கைகளை மாவட்ட கடற்றொழில் விவாத சதிகளிலிருந்து. ரு. எல். எம் ஆர்வதாக மேற்கொண்டுவருகிறார்.

உற்சாகம் உழைப்பு
உளக்கம் ஆரோக்கியம்

தருவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ் பரிட்சைக்குப் படிக்கும் பிள்ளைகளும் சதா உழைக்கும்பெற்றோரும் ஆயாசமும், களைப்பும் தீர அருந்துவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ். உடலுக்கு உற்சாகத்தையும் மூளைக்குச் சுறுசுறுப்பையும் தருவது

புரோட்டினெக்ஸ்

புரதச் சத்து நிறைந்த புரோட்டினெக்ஸ்
வாழ்க்கைக்குத் தருகிறது. ஆனந்தம், வலிமை, உற்சாகம்
புரதச் சத்து என்றால்
புரோட்டினெக்ஸ்
சொக்கலேட் சுவையுள்ள பானம்
புரோட்டினெக்ஸ்.
.50 கிரா. விலை ரூபா. 16.85

Pfizer

"ஏன் புரோட்டினெக்ஸ்"
த. பெ. 1362 கொழும்பு

ஏன் புரோட்டினெக்ஸ்
அருந்துகின்றீர்கள் என்பதை எழுதியனுப்பும் சிறந்த வாசகருக்கு கிழமை தோறும் புரோட்டினெக்ஸ் வழங்கப்படும்.

பெயர்: _____
விலாசம்: _____
அருகாமையிலிருக்கும் புரோட்டினெக்ஸ் விநியோகஸ்தர்: _____
திகதி: _____ கையொப்பம் _____

அடையாள அணிவகுப்பு

இடம்பெறுததினால் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

அடையாள அணிவகுப்பு நிமாண்டில் வைக்கப்படாதிருந்த நபரை அடையாள அணிவகுப்புக்கு படுத்த ஏற்பாடு செய்யப்படாமையால் மல்லாகம் நீதிபதி இவரை 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

தெல்லிப்பழையில் தப்பிப் பிள்ளை நடராசா என்பவரது வீட்டுக் பூட்டுமிருந்த அறையொன்றிலிருந்து [20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டது தொடர்பாக சந்தேகத்தில் [வதான ஏ. தேவதாஸ் என்னும் சந்தேகநபர் அடையாள அணிவகுப்புக் குட்படுத்தப்படுவதற்காக நிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் மீது [illegible] மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வராஜா அடையாள அணிவகுப்பு என்று கூறி பலவாரங்களாக இவரை நிமாண்டில் வைத்திருப்பதை ஆட்சேபித்ததாக கூறினார்.

அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் அல்லது பிணையில் விட வேண்டும் என்றும் அடையாள அணிவகுப்பை நடத்த சுன்னாகம் பொலிசாருக்கு வழங்கப்பட்ட இறுதி சந்தர்ப்பத்தையும் அவர்கள் பயன்படுத்த தவறிவிட்டனர் என்றும் ஆகவே இனியும் இவரை நிமாண்டில் வைப்பது முறையாகாது என்றும் கூறினார்.

நீதிபதி திரு வி. சுரேஷ்ராஜா சந்தேகநபரை 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தது விசாரணையை ஒத்தி வைத்தார். (ச)

சிமெந்து விண்ணப்பத்தில் மோசடி

செலுத்தப்பட்ட 30,400 ரூபாவும் தொழிற்சாலைக்குச் சொந்தமானது!

(மாவிட்டபுரம்)

[illegible] தொழிற்சாலையில் சிமெந்து பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 4 சிமெந்து விண்ணப்பங்களில் மோசடி இடம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவை நிராகரிக்கப்பட்டதுடன் அவ்விண்ணப்பங்களுக்கான 400 மூடை சிமெந்தைப் பெறுவதற்குச் செலுத்தப்பட்ட 30 ஆயிரத்து 400 ரூபாவும் தொழிற்சாலைக்குச் சொந்தமானது.

[illegible] தொழிற்சாலையில் சிமெந்து பெறுவதற்கு இராணுவவீரர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரது பெயர்களுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டுமாயின் இராணுவவீரரதும், உதவி அரசாங்க அதிபரதும் போலிக் கையெழுத்திட்டு, போலி அதாட்சி சீட்டுக் குறித்த 4 விண்ணப்பங்களை [illegible] சிமெந்துத் தொழிற்சாலை விநியோகப் பிரிவிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டு அவற்றுக்கான பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

இதிலிருந்து [illegible] மக்களால் என்ற ஒரு [illegible] கொண்ட விநியோகப்பிரிவு அதிகாரிகள் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் [illegible] க. மகாதேவாவுடன் இது பற்றித் தொடர்புகொண்டபோது அந்த விண்ணப்பங்கள் அவரால் போலி செய்யப்பட்டவையே என்று தெரியவந்தது.

தொடர்ந்து இதுபற்றி விசாரணை செய்த சமயம் அதற்கு விண்ணப்பத்திலுள்ள பெயர்களும் அநாமதேயப் பெயர்கள் என்றும் தெரியவந்தது.

இதனையடுத்து மேற்படி 4 விண்ணப்பங்களும் சிமெந்து விநியோக பிரிவினரால் நிராகரிக்கப்பட்டன. இவ்விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பணமும் செலுத்தப்பட்ட பின் மோசடி குறித்து கண்டுபிடிக்கப்பட்டதால் விண்ணப்பத்தை சமர்ப்பித்தவர் எவரும் உரிமை கோரவுக்குள்ளாகவில்லை. இதனால் செலுத்தப்பட்ட 30 ஆயிரத்து 400 ரூபா பணம் தொழிற்சாலைக்குச் சொந்தமானது.

இம்மோசடியைமேற்கொண்ட சிமெந்து விண்ணப்பங்கள் இவ்விடம் ஆராயவாக ஒதுக்கி செய்யப்பட்டுள்ளன. தேவைப்படுமாயின் உதவி அரசாங்க அதிபர்களை அணுகும் பரிசீலனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (-)

கிளிநொச்சி வெள்ள அகதிகள்:

நிவாரணம் வழங்க இலங்கை திருச்சபை ஏற்பாடு

(அரியாலை)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த அகதிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க இலங்கை திருச்சபை யாழ். மறை மாவட்டம் முன்வந்துள்ளது.

[illegible] ஏற்பட்டுள்ளதும் பாதிப்புக்கள் தொடர்பாக [illegible] அருட்திரு ஜாக் செல்வராஜா நாம் அடிகளார் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு தர்மபுரம் பரி யோவான் தேவாலயத்திலும் தர்மபுரம் மகாவித்தியாலயத்திலும் தங்கியிருக்கும் அகதிகளை நேரில் கண்டு குறைகேட்டறிந்ததுடன் அகதிகளுக்கு [illegible] ஏற்பட்டுள்ளதும் பாதிப்புக்களையும் கேட்டறிந்தார்.

இவர்கள் திருச்சபை யாழ். மறைமாவட்ட ஆர்மடங்கள் அருட்திரு சாம். மு. ஹோர்கிங்டன் அடிகளாரிடம் அருட்திரு ஜாக் செல்வராஜா நாம் அடிகளார் சமர்ப்பித்த அறிக்கையில் படி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (உ)

'சுதந்திரா ஆட்சி வந்தாலும் எமது பிரச்னைகள் தீராது!'

(யாழ்ப்பாணம்)

"தனிநபர் பயங்கரவாதத்திற்கும் புரிவோர் இயக்கங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை மாவிலங்கை உணர்ந்திருப்பது எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். தனிநபர் பயங்கரவாதத்தின் மூலம் நாட்டின் பிரச்னைகளை ஒரு பொழுதும் தீர்த்துவிட முடியாது. இவை உலக விடுதலைக் புரட்சிகளாகவே மாறிவிடும்."

இவ்வாறு இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட உதவி செயலாளர் திரு. எஸ். விஜயரத்தினம் தெல்லிப்பளையில் நடைபெற்ற மாவிலங்கை கருத்தரங்கில் கூறினார் திரு. த. கிளிநொச்சியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

"நமநாடு அரசியல் சுதந்திரம் பெறுவதும் கூட இதுவரை பெருவாரியான சுதந்திரம் பெறவில்லை. பெருவாரியான முதலாளித்துவ நாடுகளையே நம்பி வாழும் நிலைமை தொடர்ந்து இருந்து வருகின்றது. அதில் புதிய சூழ்நிலையை எங்கு சமதர்மவாதிகளாக சூழ்நிலையில் நாம் வரும்பொழுதும் கூட எதுவித மாற்றத்தையும் கொண்டு வந்துவிட முடியாது.

"ஆகவே அரசு முதலாளித்துவ நலன் பேணும் கொள்கைகளைப் பின்பற்றுகிறது. தற்செயலாக ஏழைகள் சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தாலும் கூட எமது நாட்டு பிரச்னைகளை தீர்த்துவிட முடியாது. காரணம் அவர்கள் கூட முதலாளித்துவக் கொள்கையையே பின்பற்றுகின்றனர். நாட்டின் பிரச்னைகளை தீர்த்து வைக்க புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் சாதாரண பொதுமக்கள் வெகு நெடுந்தூர உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. சுதந்திரக் கோரிக்கை போராட்டங்களையும் தத்திரவாதங்களையும் கருத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டும். நிலைமைகள் எல்லாவற்றையும் கருதியில் வைத்து முரண்பாடான சக்திகளை எப்படி ஐக்கியப்படுத்தமுடியும் என தெளிவாகிய பிரிவுகளை ஒரு முன்னணி பற்றி கோரிக்கை நடவடிக்கை எடுக்க முடியும்.

"இறீலங்கா சுதந்திரக் கட்சியும் லங்கா சமசமாஜ கட்சியும் மக்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் முட்டாள்தனமான

(5ம் பக்கம் பார்க்க)



சமாதான நீதவான்

(மகுடிகை)

சாவகச்சேரிகச்சி [illegible] இலங்கைப்பாரதிய அதிபர் நீ. [illegible] குருமுகம் நீதி [illegible] சாவகச்சேரிப் பகுதி சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆவார். [illegible] [illegible] தலைவராகவும், கி. மு. [illegible], கி. அ. [illegible] ஐ. [illegible] [illegible] தலைவராகவும், உறுப்பினராகவும் கடமையாற்றிய [illegible], பத்திரிகை நிருபருமாவார்.

குற்றத்தை ஒப்புக் கொண்டார்

(சாவகச்சேரி)

[illegible] மாவிலங்கையிலிருந்து [illegible] மருந்துகளை [illegible] கொண்டுவந்ததாக எதிரியேஜ [illegible] சாவகச்சேரி [illegible] நீதி மன்றத்தில் [illegible] பகுதியிலிருந்து தரக்கேடு [illegible] ஒழுக்கீனம் [illegible] [illegible] முன்னிலையில் விசாரணைக்கு [illegible] [illegible] எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் நீதிபதி 110 ரூபா அபராதம் விதித்தார்.

சைக்கிள் ஓடும்போதே சங்கீதம்

ஆர்ச்சர்

பைசிகிள் ரேடியோ

சைக்கிளில் இன்றியும் இயங்கும்.

3 பாட்டரிகள் இலவசம்.



உங்கள் நீண்ட தூர பைசிகிள் பிரயாணத்தை அனுபவியுங்கள். இந்த அதி நுட்ப சாதனத்தில் சத்தமிடும் கருவி அமைப்போடு பாதுகாப்பான எதிரொலியும் உண்டு உங்கள் பைசிகிள் ஹன்டல் பாரில் இணைத்து விடுங்கள்.

ஆர்ச்சர் பைசிகிள் ரேடியோ மோப்பெட்களிலும் பாவிக்கலாம். சைக்கிளிலிருந்து அப்புறப்படுத்தி வீட்டிலுள்ளும் பாவிக்கலாம்

எல்லா நல்ல வியாபாரிகளிடமும் கிடைக்கும்



விலை. ரூ. 350/-

இலவசமாக:
ஸ்ரீ கமியூனிக்ஸ் லிமிட்டட் இணைப்பு.

ஓர்டர்ஸ் குறுப் அங்கத்தவர்,
விநியோகஸ்தர்,
யுனிவர்ஸல் மார்கெட்டிங் சர்விஸஸ்
158, கனால் ரோட், தெற்கு.
தொலைபேசி 070 - 427/520

'சமயக் கல்வியை சரிவரப் பெறவேண்டும்'

(யாழ்ப்பாணம்)

நேரான மக்கள் கல்விக்காக தமிழ் பிள்ளைகள் வேறு பாடசாலைகளுக்கு அனுப்பு வதைத் தவிர்க்க வேண்டும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலையிலேயே சேர்த்து கல்வி புகட்டவேண்டும்.

ஏழாலை மாவித்தியாலய நூலக திறப்பு விழாவில் கலந்து கொண்ட கிளைநெறிப் புலவர் திரு. ச. வையாபுரி மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. சு. கனகராசா தலைமை வகித்தார். நூலகத்தை அமைப்புச் செய்த ஆசிரியர் தொடர்ந்து கூறியதாவது: கல்வியமைச்சரது வரத்தாசி, எமது நாட்டைக் காக்கும் உரிமை உடையவர்களாகிறோம்.

கல்வி எங்கே உரிய காலத்தில் பெறப்பட்டுவிட்டதோ அங்கே கல்வியையும் சரிவரப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்விழாவில் உரை நிகழ்த்திய மட்டக்களப்பு ஆசிரியர் திரு. த. தனஞ்சயன் கிழக்கிலங்கையில் அமைய இருக்கும் கல்வி அமைப்பின்படி இப்பாடசாலையே பிரதம பாடசாலையாக அமைய இருப்பதால் கனிஷ்ட பாடசாலையில் கல்வி கற்றபின் படிப்பிற்காக வேறு இடம் தேடி அலையாமல் தரமிக்க ஆசிரியர்கள், அதிபர்கள் அமைந்துள்ள இப்பாடசாலையில் சேர்ந்து கல்வி புகட்டப் பெற்றோர் முன்வரவேண்டும் என்று கூறினார்.

உ. ஆ. சபை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. இ. திருஞானசம்பந்தர், திரு. க. மகாதேவன், திரு. நா. செல்வரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. [வி]

பொதுமக்கள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக் கிளை மன்னார் பட்டினக் கிளையில் கடமையாற்றிய ஊழியர்களில் ஒன்பதுபேர் மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையில், மன்னார் பட்டினக் கிளையில் கேட்கும் தாமதமடைந்துவருவதுடன் பொதுமக்களும் பாதிப்படைந்துவருகின்றனர்.

சுதந்திரா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மான நம்பிக்கைக்கு எதிரானப் போராடி மக்களை இன, மத பேதமின்றி போராட்டங்களுக்கு தயார்படுத்த வேண்டுமாக வேண்டும். இம்மூன்றாவது அரசிற்கு எதிரானதாகவும் முற்போக்கு தேசபக்த இயக்கமாகவும் இருப்பது விரும்பத்தகுந்தது."

மக்கள் இதயங்களில் நான் வாழவேண்டும் மண்டபங்களுக்கு எனது பெயர்வேண்டாம்

பரிசளிப்பு விழாவில் 'யோகேஸ்'

[யாழ்ப்பாணம்]

'எனது அரசியல் வாழ்வு முடிந்தபின்னர் மக்கள் இதயங்களில் 'இவன் தமிழ் மக்களை தொண்டன்-தமிழ் மக்களை நேசித்தவன்' என்று எழுதினாலே போதும். இப்போது மண்டபங்களுக்கு எனது பெயரைச் சூட்ட வேண்டாம். அண்மைக்காலச் சம்பவங்கள் என்னைத்திடப் படுத்தியுள்ளன, எனது கடமையை நான் தொடர்வேன்.'

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நவரத்தினா ரோமன் கத்தோலிக்க வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. லாக்ஸ் குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'அண்மைக்காலங்களில் பல அனுபவங்கள் எனக்குக் கிடைத்தன. பொலிஸ் விசாரணைகளுக்குள்ளானேன். எனது வீடு-கூடமெல்லாம் எரிக்கப்பட்டன. மக்கள் தந்த பாராட்டு மடல்களுக்கூட எரிந்துவிட்டன. அதனால்தானோ என்னைப் பாராட்டி எனது பெயரை மணிமண்டபத்தில் பொறித்துள்ளீர்கள். அழகிய யாழ். நகரில் எம். பி. என்பதில் எனக்குப் பெருமை. பாராளுமன்றத்திலும் நான் இதனை குறிப்பிட்டு பெருமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் எனக்குள்ள கடமையை நான் தொடர்ந்து செய்வேன்.'

யாழ். மேயர் திரு. இராஜராசுவரதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'இன்று நெருக்டிமிகுந்த நேரம். மரணவன் ஏட்டுக் கல்வியோடுமட்டும் நின்று விடாது சமூகப் பேரறிவாளர்களையும் பயில வேண்டும். அமரர்களான ஜீ. ஜீ. பொன்னம்பலம், செல்வநாயகம் ஆகியோர் தமிழர்களின் சொத்து ஒதுங்கியவர்களல்ல. தொடர்ந்து பணியாற்றி தமிழர்களை தலைநிமிரவைத்து நிமிர்ந்தவர்கள். தோல்விகளைக் கண்டு ஒதுங்கிவிடாது. தொடர்ந்து முயற்சி செய்து முன்னேற வேண்டும். மாணவர்கள் இதனை மனதில் உணர்ந்து செயல்பட வேண்டும்.

யாழ். மறை மாவட்ட ஆயர் பேராயர் வ. தியோகுப்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டதாவது: "சமயக்கல்வியின் முக்கியத்துவம் உணரப்படவேண்டும். புதிய கல்வி கொள்கையறிக்கையில் சமயக் கல்வி பற்றி அவ்வளவு குறிப்பிடப்படவில்லையாயினும் நாம் அதனை வலியுறுத்தி வருகிறோம். இன்று சமூகத்தில் ஆசிரியர்களது நல்ல மேல்கையுடையதாக இல்லை. திறமை மிகுந்த ஆசிரியர்கள் நல்ல ஊதியத்தை தேடி வெளிநாடு செல்கிறார்கள். மற்றைய தொழில்புரியும் பட்டதாரிகளுடனாவது பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் எனது அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய நிலையில் இது கவனிக்கப்பட வேண்டியது." என்றார்.

யாழ் பட்டதாரிகளில் அதிபர் திரு. சி. இராசநாயகம் யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. செ. எட்வேட், ஆசிரியர் திரு. மு. மனுவேல் ஆகியோருட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். திருமதி சரோஜினி யோகேஸ்வரன் பரிசில்களை வழங்கினார். இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

யாழ், மாவட்டத்தில்

மருந்து கலவையாளர் பற்றுக்குறை நீங்கும்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலையில் நிலவும் மருந்துக்கலவையாளர் பற்றுக்குறையை நீக்குமாக 4 புதிய மருந்துக் கலவையாளர்கள் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர். இதற்கான அதிகாரத்தை யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

தடுப்பூசி, பல், கொக்குவில், மூளாய், சோரவில், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை, இரணைதீவு ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக் கலவையாளர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாது இருப்பதாகவும், லீவு எடுப்பவர்களின் இடங்களுக்கு பதில் கடமைக்கு அனுப்புவதற்கும் மருந்துக்கலவையாளர்கள் தட்டுப்பாடாக இருப்பதாகவும், சுகாதார அமைச்சு புதிதாக சுதந்திர நிருபத்தர்களை புதிய மருந்துக்கலவையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கும்வரும் அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் மாவட்டக் கிளையின் செயலாளர் திரு. எம். சுந்தரராஜா யாழ். சுகாதார சேவைகள் கண்காணிப்பாளரை நேரில் பேட்டி கண்டு கோரிக்கை விடுத்திருந்தார். இதனை அடுத்து யாழ் மாவட்டத்தில் 14 புதிய மருந்துக்கலவையாளர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மெட்டசிஸ்டொக்ஸ் 'ஆர்'

உங்கள் பயிர்களுக்கு அதிக பாதுகாப்புத் தருவதற்கே உருவானது

பன்னெடுங் காலமாக, மனிதன். இராப் பகலாகத் தன் வயல் வெளிகளில் பரண் கட்டிக் காவலிருந்து, தன் பசி நீக்கி வாழ் வளிக்கும் பயிர் பச்சைகளை மிருகங்களிட மிருந்து கட்டிக் காக்கப் பாடுபட்டான்

ஆனால் எப்படிக் காவலிருந்தும் பூச்சி புழுக்களின் தாக்குதலைத் தடுக்க அவனால் முடியவில்லை.

மெட்டசிஸ்டொக்ஸ் 'ஆர்' செறிந்து நிலைக்கும் கிருமிநாசினி, வேர்களிலும் இலைகளிலும் செறிந்து செயற்படும் அதன் வன்மை 14 முதல் 24 நாள்களுக்கு நிலைத்து, அவ் வேளையில் பூச்சி புழுக்களின் மறுதாக்கு தலைத் தடுக்கிறது.

மெட்டசிஸ்டொக்ஸ் 'ஆர்', மிளகாய், புகையிலை, அவரை, மற்றும் ரோஜா, ஆர்க்கிட் போன்ற அலங்காரத் தாவரங்களைத் துளைத்தும் சாரம் உறுஞ்சியும் தாக்கும் பூச்சி புழுக்களுக்கு விசேஷமாகச் சிபாரிசு செய்யப்படுகிறது.

மெட்டசிஸ்டொக்ஸ் 'ஆர்'
உங்கள் பயிர்களுக்கு அதிக பாதுகாப்புத் தருவதற்கே உருவானது

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பேயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்

50, பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு 10, தொலைபேசி: 93563.

MeIADS

50 மி. லீட்டர் ரூபா 10-50
100 மி. லீட்டர் ரூபா 20-00
250 மி. லீட்டர் ரூபா 38-00
450 மி. லீட்டர் ரூபா 75-00

கிளிநொச்சியில்

இயந்திரச தன மரவேலை பயிற்சி நிலையங்கள்

அமைச்சர் தொண்டமான் ஆரம்பித்து வைப்பார்

(கண்டிக்கு)

யாழ் மாவட்டத்தில் மரவேலைப் பயிற்சியை இயந்திர சாதனங்கள் மூலம் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு தொழில் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதனால் மரத் முயற்சியில் ஆரம்பமாகும் இப்பயிற்சி நிலையங்களைப் பார்வை இடவும் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய பயிற்சி நிலையத்தைத் திறந்து வைக்கவும் சென்ற ஞாயிறன்று தொழில் அமைச்சர் திரு. தொண்டமான் வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இப்புதிய முறை இயந்திர சாதன மரவேலைப் பயிற்சி நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் தனியார் நிலையடியிலும், சுன்னாகம் மிக்சர் தெரு வீதியிலும், வாலிபாய் மாவடி வீதியிலும், கிளிநொச்சியில் கிராமங்கள் தோறும், வேலணையில் வாத்திராசா வீதியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு வருடகாலப் பயிற்சியில் ஈடுபடும் ஒவ்வொரு மாணவருக்கும் நாளாந்த வேதனமும் இலவசமாக மதிய உணவு வீதம் பகலும் சிறுவகைத் தொழில் நிமித்தங்களுக்கு ஒரு வருட பயிற்சிக்காக ரூபா 5,000 ப்பணமும் வழங்கப்படவுள்ளதாக வடமாநில மரவேலை மேற்பார்வையாளர் திரு. க. ந. வைரத்தினம் தெரிவித்தார்.

தரைதட்டும் இயந்திரப்படகுகள்

(மன்னார்)

மன்னார் செபஸ்தியார் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இயந்திரப்படகுகள் முழுத்துவாரம் கடலைக் கடந்து செல்ல முடியாது மணல் மேடுகளில் தரை தட்டி நிற்கின்றன

முழுத்துவாரம் கடலில் மணல் மேடுகள் நிறைந்திருப்பதால் ஒழுங்கைப்படகுகள் தரைதட்டி நிற்பதோடு சில சமயங்களில் பழுதடைந்தும் விடுகின்றன.

தனுக் மன்னார் பகுதி மீனவர்கள் பெருஞ்பாதிப்படைந்து வருகின்றனர்.

இலலிண்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நாடோடி
(புதிய பிரதி)

விஜயா (யாழ். நகர்)
காலை 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30
Greg Morris
STAB
(action Packed)

லிங்கேஸ் (மானிப்பாய்)
தினசரி 10-30, 6-30, 9-30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர் - லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(மக்கள் கலை)

லிங்ஸர் இன்னும் சில இனங்கள் மட்டும் (யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி.ப. 2-30, 6-15, 9-30
ரஜனி, சீமா நடித்த
காளி
வெகு விரைவில்
(அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)
நிறம் மாறாத பூக்கள்
(கலர்)

ராணி தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன், ஸ்ரீபிரியா, விஜயகுமார், மஞ்சுளா, லதா, ஸ்ரீகாந்த் நடித்த
நீயா
(இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி)

றீகல் 2-வது வாரம்!
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆரின் வெற்றிப் படைப்பு
"ரகசியப் பொலிஸ் 115"
யாழ். நகரில் இதுவே வைபவ நடனையாக காண்பிக்கப்படும்.

ராஜா (யாழ்ப்பாணம்) **சாந்தி** (மல்லாகம்)
தினசரி 4 காட்சிகள்
2½ மணித்தியாலங்கள் இப்படத்தைப் பார்ப்பவர்களுக்கு படம் முடிவடைவதே தெரியாமல் சிறுவிறுப்பான சம்பவங்கள் கூடிய படம் "தர்மயுத்தம்"



கதை நடிகர் ரஜனிகாந்த் சக்கரவர்த்தி
கதாநாயகி ஸ்ரீதேவி லக்ஷ்மிஸ்ரீ
'தர்ம யுத்தம்'
(சக்திமான் கலர்)

வீட்டுத் தோட்டப் போட்டி

(வேலணை)

இலங்கை மரபு வளர்ச்சி சபை மதிவு செய்யப்பட்ட இளம் விவசாயிகள் ஏழு பேர்களுக்கு விவசாய நடவடிக்கைகளில் உற்சாகப்படுத்தும் நோக்குடன் இலங்கை வங்கி இவர்களுக்கிடையே வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.

இலங்கை வங்கி இப்போட்டியை விவசாய இலாகாவுடன் இணைந்து நடாத்துகின்றது. (மு)

இன்றைய பலன்

வார்த்திகை மாதம் 29 ம் திகதி திங்கட்கிழமை
(14-12-81)

மேஷம்: செய்தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும். பெரியவர்கள் ஆசி கிடைக்கும். போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். விளையாட்டு வீரர்கள் முதலிடத்தை பெறுவர்.

இடபம்: புதிய தொழில் மூலம் லாபம் கிடைக்கும். புத்திரர் புகழ் கிடைக்கும். விவகாரத்தில் சாதகம். இன்று திங்கள் நாட்டலாம். பொருள் துறையில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும்.

மிதுனம்: வாக்குவாதங்களால் நலத்தை பாதிக்கலாம். உணவு விடயத்தில் கவனம் வேண்டும். விரயங்களால் நஷ்டம் ஏற்படலாம். புதிய முதலீட்டை தவிர்க்கவும்.

கடகம்: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்தசம்பவம் ஒன்று மீண்டும் வேதனையைத் தரும். கடமையில் கவனம் செலுத்தவும்.

சிங்கம்: கவனமாக மொழிபேசி காரியத்தை சாதிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். வரவேற்கவேண்டிய தினம்.

கன்னி: எதிர்பாராத வேற்றுமைகள் விலகுதற்கு இடமளிக்கும். புதிய இடத்தில் இருந்து பணம் தேடுவீர்கள். ஆபரண விலவுகளுடன் தெய்வ பக்தியும் நன்று.

துலாம்: வாகனம் சொந்தக்காரர்களுக்கு அருமையான நாள். ஆசிரியர்களால் அனுகூல நிறைவு இருக்கும். வெளிநாட்டு ஆராய்ச்சியிலும் ஆர்வம் பிறக்கும். பொன்னான தினம்.

விருச்சிகம்: கொள்கையில் சிறிய மாற்றங்கள் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியம் ஆற்றுவீர்கள். இனசனக் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு. பிள்ளைகளின் செயல்கள் பெருகும்.

தனு: கற்பெருமை தாங்கான பாரதத்து அழைத்துச் செல்லும். பொருளும் பணமும் செலவாகும். நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படும். ஏமாற்றம் ஏற்படும். அமைதி நன்று.

மகரம்: வாழ்க்கையில் திருப்தி வீசும். கணவன் மனைவி உறவு கூடி பு கொண்டதாக இருக்கும். மற்றவர்களின் கவனத்தை திருப்புவதில் வெற்றி அடைவீர்கள். சுபகாரியம்.

கும்பம்: வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். பிறர் தலையிடுக்கும் இடமுண்டு. நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

மீனம்: இன்று முன்னணியில் நிற்பீர்கள். நிதானமாக உத்தியோகத்தரிடம் செல்வாக்கு வளர்பிறையாகும். பிதாவழி செய்தியும் கிடைக்கும்.

சோதிடக்கலைஞர்
திருமலை க. வேலுப்பிள்ளை

குடும்பநலத் தொண்டர் மாநாடு: 16-ல் நடைபெறும்

இம்மாதம் 16-ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கும் இலங்கைக் குடும்பநல திட்டச் சங்கத்தின் வடபிராந்திய குடும்ப நலத்தொண்டர் மாநாடு-கூடைப்போட்டி 'ஈழநாடு' அனுசரணையுடன் நடைபெறும். குடும்பத்திட்ட சுலோகப்போட்டியின் முதுவத்திகதி 15-ம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் நீடிக்கப்பட்டுள்ளது

பங்கேற்க விரும்புவோர் தங்கள் குடும்பநலத் தொண்டர் மாநாடு புதன்கிழமை வாழ்வீரமக்கள் மண்டபத்தில் நடைபெறுகிறது

கலோகப்போட்டிக் கூப்பன்கள் 'ஈழநாடு' அலுவலகத்தில் உள்ள கூப்பன் பெட்டியில் இம்மாதம் 15-ம் திகதி நண்பகல்வரை தேரிக் போடலாம். தபாலில் வரும் கூப்பன்கள் அன்றைய தினம் நண்பகல் வரைமட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

குடும்பத்திட்ட சுலோகப்போட்டி

முடிவு திகதி: 15-12-81

இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் வடபிராந்திய குடும்பநலத்தொண்டர் மாநாடு, 81 டிசம்பர் மாதம் 16ந் திகதி நடைபெறுவதையொட்டி இச்சுலோகப் போட்டி நடைபெறுகிறது. சிறியகுடும்பம் பற்றிய கருத்தினை அல்லது குடும்பத்திட்டப்பொருளை வலியுறுத்தக்கூடிய சுலோகங்கள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

சுலோகங்கள் பத்துச் சொற்களுக்கு மேற்படாததாகவும் சொல்லாலும், பொருள்நயம் உள்ளதாகவும் எழுதுபவரின் சொந்த கருத்தில் அமைந்ததாகவும், முன்னர் வெளிவராததாகவும் இருக்கவேண்டும் ஒருவர் எத்தனை சுலோகங்கள் அனுப்பலாம். வரிசைக்கிரமப்படி கிடைப்பது.

..... கத்தரிக்கவும் .....

1-ம் பரிசு: ரூ. 125-00
2-ம் பரிசு: ரூ. 75-00
3-ம் பரிசு: ரூ. 50-00

கூப்பன் வருமாறு:

பெயர் _____

விலாசம் _____

சுலோகம்

சுலோகப் போட்டி,
"சமநாடு" யாழ்ப்பாணம்

2வது வாரம்
ஹரன்
நீலமலர்கள்

வெஸ்லி காலை 2-30 6-15, 9-30
பணக்காரப் பெண்

சாந்தி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
ஆரணங்குகள் திரள்கின்றனர்!
அரங்கினரோ திணறுகின்றனர்!!
100-வது வெற்றித் திருநாளை நோக்கி....
'குரு' (வண்ணச் சித்திரம்)
கமல் ஸ்ரீதேவி நம்பியார் - மேஜர் முத்துராமன் நடித்த
ஆங்கிலப்படங்களுக்கு நிகரான படப்பிடிப்பு!
அருமையான சண்டைக்காட்சிகள்
நிறைந்த வசீகரமான பொழுதுபோக்குப் படம்

ஆலோசனைச் சபை அவசியம்

(சாவகச்சேரி)

மீசாலை வெள்ளைமாவடி பிள்ளையார் கோவில் திருவாசகம் சிறந்த முறையில் நடப்பதற்கு இக்கோவிலில் மிகுந்த அக்கறையும் ஆர்வமுமுள்ள அன்பர்களும் கோவில் பூஜைகளில் கலந்துகொள்ளும் அன்பர்களுமான கிராமவாசிகளைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு எமக்கு உதவியாக நியமிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

மீசாலை தெற்கு வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாசபைத் தலைவரான கட்டப்பிடிகூட்டத்தில் தலைவர் வி. பெரியதம்பி கேதீஸ்வரனார் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி வடக்கு, மீசாலை வடக்கு, மீசாலை தெற்கு ஆகிய ஊர்களிலிருந்து பலர் கலந்து கொண்டனர் பலரும் பயன்பெற்றனர். (உ)

கார்-சைக்கிள் விபத்து

(சுன்னாக்குவி)

கார்—சைக்கிள் மோதலில் சைக்கிள் செலுத்தி வந்தவர் சுயநினைவிழந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். பிறவுண்ரோடு அரசடி சந்தியில் இந்த விபத்து நிகழ்ந்தது. சைக்கிளில் வந்து கார் மோதியதாகவே கண்டவர்கள் கூறினர். கார் உரிமையாளர் வே. பாலன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். யாழ். பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

'அரசியற்காரணத்துக்காக ஒருவர்கைதாவது மனித உரிமைகளை மீறுவதாகும்'!

– விரிவுரையாளர் சீலன் கதிர்காமர்

(பக்கிலைப்பகுதி)

"அரசியல் காரணத்திற்காக ஒருவர் கைது செய்யப்படுவது மனித உரிமைகளை மீறும் செயலாகும் வருடம் தோறும் 4 ஆயிரம் பேர் தொடக்கம் 5 ஆயிரம் பேர்வரை உலக நாடுகளில் ஒருவர் கொலை இன்ன அரசியல் நம்பிக்கையில் காரணமாகக் கைது செய்யப்படுகிறார்கள் சர்வதேச மன்னிப்புச் சபை இதனை கண்டித்து சமர்ப்பிக்கப்பட்ட நாடுகளுக்குக் கடிதங்களை அனுப்புகிறது"

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வந்தனையும் நீதியையும் நிலை நாட்டும் குழுவின் தலைவரும் வாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சீலன் கதிர்காமர் கேற்றுண்டகைய கூறினார்

சாவகச்சேரியில் அரசவழிப்பேரணிக்குழுவும் சாவகச்சேரி நகராளுமன்றமும் இணைந்து நடத்திய மனித உரிமைகள் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார் சாவகச்சேரி நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு யாழ் மாவட்ட சமாதான நிலைய ஒருங்கிணைப்பாளர் திரு. ப. வாரிதாஸ்பிள்ளை தலைமை வகித்தார் திரு. சீலன் கதிர்காமர் தொடர்ந்து கூறியதாவது:

"மக்களுக்கு பாதுகாப்பினை அளிக்க வேண்டிய பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கையினால் வருடம் தோறும் உலகில் 5 லக்சம் பேர் கொலை செய்யப்படுகிறார்கள் அல்லது காணாமற் போகிறார்கள் இந்த அவலச் சம்பவங்கள் பல இலங்கையிலும் ஏற்படுகின்றன. இத்திருவளை செய்யப்படக் காரணி ஒருவன் சாதாரண சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படாமை என்பதனாலும் மனித உரிமைகளை மதிக்கப் செயலாகும்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தவகை மனித உரிமைகள் மீறலைக் கண்டிக்க இரண்டாயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களைக் கண்டித்து வெளிநாடுகளில் உள்ள குழுக்கள் கண்டனக் கடிதங்களை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளன இதன்மூலம் பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டி மனித உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியதாக உள்ளது" என்றார்.

இக்கூட்டத்தில் வண பிதா ஜோசப் செல்வரத்தினம் உரையாற்றுகையில் "சமூகத்தில் மனித உரிமைகள் மதிக்கப்படாமை மிதிக்கப்படுகின்றன. கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் ஆண்டவனை நாடித் தரிசிக்க நிலைஆலயங்களில் உரிமை மறுக்கப்படுகிறது. நாங்கள் உரிமையுடன் வாழ்ந்துடன். எங்களுடைய வாழ்வு வர்க்கையும் உரிமையுடனவாழ வழி அமைப்போம்" என்றார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கு பரராசசிங்கம் இக்கூட்டத்தில் உரையாற்றுகையில் "கல்வி வெளிவளி அறிவையில் பல மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது. பொருத்தணி பாடசாலை முறை கல்வியில் மனித உரிமைகளை மீறக் கூடியனவாக உள்ளன. இந்நாட்டில் 10 வீதமான மாணவர்கள் வசதி குறைந்தவர்களாகவிருந்தும் வெள்ளை அறிவையில் அவர்களை பற்றி எதுவும் கூறப்படவில்லை கற்றல் கட்டாயம் கல்விக்கும் வெளிவளி அறிவையில் இடமில்லை" என்றார்.

சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாகன் உரையாற்றுகையில் "இலங்கையில் அரசியல் அமைப்பில் வட்டுமனித உரிமைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆனால் இக்குள்ள கிராமப்புற இளைஞர்கள் கல்வி மொழி ஆகிய துறைகளில் மனித உரிமைகள் அற்றவர்களாக இருக்கிறார்கள் என்றார்.

திரு. வி ஜீ. தங்கவேலு "எங்கள் மத்தியில் வாழ்கின்ற ஒரு பகுதி மக்களுக்கு ஆலயங்களில் வழிபாட்டு உரிமை மறுக்கப்படுவது பிரதேசவாதமான செயலாகும்" என்றார்.

மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஓர்இளம் பெண்ணின்கதை

[மன்னார்]

மன்னார் அரசினர் வைத்திய சாலையில் கடமை யாற்றும் ஊழியர்களின் அசிரத்தையாலும் பராமுகத்தாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் நாலைந்து மணித்தியாலத்திற்குமுன் இறந்தும் கண்டு பிடிக்கப்படவில்லை!

77 ம் ஆண்டு நிகழ்ந்த ஆசிரியர் தினத்தன்றோது அதிகாலை மன்னார் - வவுனியா வீதியிலுள்ள சவேரியபுரத்தில் குடியேறியிருந்த த. சிறிலக்ஷ்மி (22 வயது) என்ற இளம் பெண்மணி வலி வாரணை மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவதினம் இறந்தவரின் சகோதரி ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தபோது இறந்தவர் நித்திரைபோல் கிடந்தார். இறந்தவரின் சகோதரி பல முறை எழுப்பியும் இறந்தவர் எழும்பவில்லை. இதனால் சந்தேகம் கொண்ட அவர் இறந்தவரின் வைரடியைப் பிடித்துப் பார்த்தார்; நாடி துடிப்பில்லை. பின் மூக்கினருகில் கையைத்துப்பார்த்தார் மூச்சும் வரவில்லை. இச்சம்பவம்பற்றி இறந்தவரின் சகோதரி அங்கு கடமையிலிருந்த வைத்திய அதிகாரியிடம் தெரிவித்தார். வைத்திய அதிகாரி வந்து பார்த்தபோது நோயாளி நாலைந்து மணித்தியாலத்திற்கு முன்பே இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்!

இக்கொலைக் கொடூரமான மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜனாப் எம். எம். ஆஸிக் தலைமை வகித்தார். மரணவிசாரணை ஊழியர்கள் மிகவும் கவனக்குறைவாகவே கடமை செய்திருக்கிறார்கள் நோயாளர்களை கவனிக்கும் போது ஊழியர்கள் மிகவும் கவனத்துடன் கடமை உணர்வுடன் செயல்பட வேண்டும். இனிமேலாவது இப்படியான தவறுகள் ஏற்படாதிருக்க வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்;

இறந்த நோயாளியின் மரணமான வெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது கடமையிலிருந்த ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கைகளை வைத்திய அதிகாரி மேற்கொண்டார்.

இன்று

மங்களகரமான திறப்பு விழா

சாவகச்சேரி நவீனசந்தையிலுள்ள கட்டிடத்தில்

"தங்கம்"

சகலவித

★ அழகுசாதனப் பொருட்களும்

★ திருமண புடவை வகைகளும்

பெறுவதற்கு சிறந்த இடம்.

"தங்கம்" 7, நவீன சந்தை (கூடுபுறம்)
சாவகச்சேரி

1719

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

நாகலிங்கம் ரவி

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் வாரத்திலை வாரதம் 29-ம் திகதி (14-12-1981) திங்கட்கிழமை சிரமங்களிலும் மறுநாள் 30-ம் திகதி (15-12-1981) செவ்வாய்க்கிழமை காலையும் இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகளும் நடைபெறும். இவ்விரு வைபவங்களிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

தந்தை, தாய், சகோதரி, மருமகன்

"ஸ்ரீவள்ளிநாகி இல்லம்"
சுன்னாகம் கிழக்கு.
சுன்னாகம்

1720

குடும்பநலச் சங்கத் தலைவர்

[மன்னார்]

மன்னார் மாவட்ட குடும்ப நலச் சங்கத் தலைவராக டாக்டர் திருமேனி குருசு மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

வடமாகாண குடும்ப நல சங்க முகாமையாளர் திரு. கலா பரமேஸ்வரக் குருக்கள் மேற்பார்வையில் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற மன்னார் மாவட்ட குடும்பநல சங்கத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் டாக்டர் திருமேனி குருசு மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் செயலாளராக மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலை குழு தலைவர் ஜனாப் எம். எம். எஸ். பொதுவுக்கு, பொருளாளராக பேராசிரியர் மாமாங்கராஜா அவர்கள் திருமதி எஸ்.எம். பக்கிரஸாத் தெரிவு செய்யப்பட்டனர்.

உடுப்பிட்டி
பல நோ. கூ. சங்கம்

விளம்பரம்

உடுப்பிட்டி பல நோ. கூ சங்கத்திற்கு ரூபா பிரிக்கப்பட்ட 2500 வெற்றிச்சீட்டுக்கு விலைப்பத்திரம் மூலம் விற்கப்படுகிறது 18-12-81ம் திகதி முன்னர் ரூபா 100/- கட்டி கேற்றுடி சங்கத்தில் விலைப்பத்திரம் பெற்றுக் கொள்ளவும் விலைப்பத்திரங்கள் வரவும் 21-12-81 மாலை 1 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் 'பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப நோ கூ சங்கம் வல்வெட்டித்துறை' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்.
உடுப்பிட்டி
ப. நோ கூ சங்கம்,
வல்வெட்டித்துறை.

1711

முல்லைத்தீவு
அபிவிருத்திச் சபை

சந்தைக் குத்தகைக்கான கேள்வி அறிவித்தல் 1982

முல்லைத்தீவு சந்தையை 1982ம் ஆண்டுக்கு குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கு 30-12-1981 திகதி 12-00 மணி வரை எழுத்து கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். சந்தையை நிர்வாகம் செய்யப்படும் கேள்விக்காரர் கேட்கும் அமிசத்தை வேண்டுவதென்ற நிபந்தனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் 29-12-1981 திகதி 12-00 மணிவரை முல்லைத்தீவு பட்டினக் கிளை அலுவலகத்தில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை மேற்படி கிளை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

பி. எல். பற்றிக்,
மாவட்ட செயலாளர்,
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட அபிவிருத்திச் சபை,
முல்லைத்தீவு பட்டினம்.

மாவட்ட அபிவிருத்திச் சபை,
கிளை அலுவலகம்,
முல்லைத்தீவு பட்டினம்.
10-12-1981.

17[illegible]

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

பதவி வெற்றிடங்கள்

1. கணக்கு விசாரணை தரம்-1
2. உழவு பதிவுச் சார்த.
3. வெறிச் சாரதி.
4. இளை மேற்பார்வையாளர் தரம்-2.
5. கணக்கு விசாரணை தரம்-2.
6. கிட்டங்கி விசாரணை தரம் 2.
7. கிடங்கட விசாரணை தரம்-3.
8. இளை முகாமையாளர் தரம்-3
9. விநியோகர்

மேற்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் சுய எழுத்துப்பாடுடன் கல்வியறிவுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன. இப்பதவிகளுக்கான கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் சங்கத் தலைமை காரியாலயத்தில் ரூபா 1/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு 26-12-81-ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ சங்கத் தலைமைக் காரியாலயத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்

பொதுமுகாமையாளர்.
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

1707

வரிவிளம்பரம்

வாடகைக்கு

புங்கங்குளம் வீதியில் 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேலு பிள்ளை 72 புங்கங்குளம் வீதி யாழ்ப்பாணம்.

1691

விற்பனைக்கு

EN 9000 தொடர் A 50 விலை ரூபா 19 500/- மேல் தொடர் பக்கமாக 7ம் [illegible] ஒழுங்கை, மானிப்பாய்

1716

நீர்வேலி சந்தையடி சோலிலுக்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு து. ஜெயரட்ணம், கரபி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

1699

யாழ்ப்பாணம் பலாலி வீதியே, திருநெல்வேலி சந்திக்கும் பக்கமே எழுவ சந்திக்கும் இடையில் கிணற்றுடன் கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சோதிராசா (கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்) 5ம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

1703

தேவை

தேவைக்கு சீமாட்டிகளும் பருவமடையாத பெண்களும் விற்பனை செய்வதற்கு ஆண்களும் தேவை. தேவைக்கு மிகுதி 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

1712

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு விசாரணை அலுவலகத்துக்கு ஆங்கில அறிவும் விசாரணை அலுவலகங்களில் பற்றிய அறிவுமுள்ள முப்பது வயதுக்குக் குறைந்த ஆண்கள் தேவை. இதே நிறுவனத்திற்கு பொ. த. (உயர்தர) வரிட்சையில் வர்த்தகவியலில் தெரிவும், ஆங்கில அறிவும் நல்ல எழுத்துவன்மை பேச்சுத் திறமையுடைய இளைஞர்களுக்கு தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் உற்றவர்களாகிய முக்கியஸ்தர் இருவரின் அன்னலுடன் பெறப்படும் நற்சான்றிதழ் பத்திரங்களுடன் 19-12-81ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1708, மே/பா, சமாதானம், யாழ்ப்பாணம்.

1708

கல்வி

ஆரிய தேர்வுப் பரீட்சைக்கான பொது அறிவு பொது உயர்சார்பு ஆகிய நூல்கள் விற்பனைக்குண்டு. க. குணராசா ஆரியவிலாஸ் ஸ்டோர், புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

1694

அமரகீதம்

(சங்கீதக்குழு)

போக்குவரத்து சட்ட விதிகளை மீறி வீதிப்பாவனையை ஏற்றி வருவதனால் மாத, பல் நிலைய கியூரியாக்களில் நிகழ் பிரயாணிகளின் வசதிக்காக தனது வாகனங்களில் ஏற்றிய தாகவும், மிதிபலகையில் பிரயாணிகளைக் கொண்டுசென்றதாகவும் விசாரணைக்குட்படுத்தப்பட்ட "மினி பஸ் சாரதிகள் 35 பேரை நாம் பொலிஸார் மாத நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்ற விசாரணையில் குற்றத்தை ஒப்புக்கொண்ட 9 மினி ஸ் சாரதிகளுக்கு யாழ் நீதவான் ரி. ஜோசப் தலா 200 ரூபா அபராதம் விதித்தார். ஏனைய சாரதிகளின் வழக்கு விசாரணைக் ஒத்திவைக்கப்பட்டது.

★ வடபகுதி கடற்பிராந்தியத்துக்குள்

அத்துமீறும் மீன்பிடி படகுகள் பறிமுதல்!

கடற்படைக்கு அதிகாரம்

(நமது நிருபர் எம். எஸ். துரைராசா)

இலங்கையின் கடற்பிராந்தியத்தில் அத்துமீறிப் பிரவேசிக்கும் அந்நிய மீன்பிடிப் படகுகளையும், கப்பல்களையும் கைப்பற்றுவதுடன், மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்வதற்குப் புதிய சட்டத் திருத்தம் ஒன்றை அரசாங்கம் செய்துள்ளது. இப்புதிய சட்டத்தின்படி தீவில் 30 மைல் கடற்பிராந்தியத்திற்குள் வரும் அந்நிய மீன்பிடிக் கப்பல்களைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதுடன், மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்யமுடியும்.

யாழ் மாவட்டக் கடற்பிராந்தியங்களில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிக்கும் அந்நிய மீன்பிடிப் படகுகளினால் ஏற்பட்ட பாதிப்புக்களை யாழ் மீனவர்கள் கடற்றொழில் விஸ்தரிப்பு அதிகாரிகளுக்குக் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் பல தடவைகள் முறைப்பாடு செய்திருந்தனர். இதன் பயனாக, யாழ் மாவட்டக் கடற்பிராந்தியங்களில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிக்கும் அந்நிய மீன்பிடிக் கப்பல்களைக் கைப்பற்றுமாறு கடற்படையினருக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

நெடுந்தீவு மயிலிட்டி, ஊர்காவற்றுறை போன்ற இடங்களின் கடற்பிராந்தியங்களில் இலங்கைக் கடற்படையினர் இரவிரவு தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

அந்நிய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்கள் பற்றியும், அவற்றைக் கைப்பற்றுவதற்கு இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்படுள்ள அதிகாரங்கள் குறித்தும் கடற்றொழில் அமைச்சின் செய்லாளரின் விசேட அறிக்கை ஒன்று பின்வருமாறு தெரிவிக்கிறது:

"இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதாரப் பிராந்தியமாகப் பிரடனஞ்செய்யப்பட்டுள்ள 200 மைல்களுக்குள் பிரவேசிக்கும் அந்நிய மீன்பிடிக் கப்பல்களைக் கைப்பற்றிக் கரைக்கு இழுத்தல்வதற்கு கடற்படையினருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இலங்கையின் எல்லை எல்லையான 12 மைல்களுக்குள் மீன்பிடிக்கும் அந்நிய கப்பல்களைப் பிடிப்பதற்கு மட்டுமே கடற்படையினருக்கு அதிகாரம் இருந்தது. இதன் பயனாக மீன்பிடிக் கப்பல்களைப் பிடிக்க முடியாதிருந்தது. இக்கப்பல்கள் 12 மைல்களுக்கு அப்பால் ஓடிச் சென்று தப்பித்துக்கொள்ளவும் முடிந்தது.

"மார்ச் மாதத்தில் கியூபாவின் தலைநகரான ஹவானாவில் நடந்த அணிசேராநாடுகளின் கடற்றொழில் அமைச்சர்களின் மாநாட்டில், இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் திருசெல்டன் பெரேரா, சிறிய நாடுகளின் கடற்பிரதேசத்திற்குள் பெரிய நாடுகளின் கப்பல்கள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிப்பதைத் தடுப்பதற்குச் சர்வதேச அமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கை விடுத்திருந்தார். அவ்வேண்டுகோள் மீண்டும் ஜெனிவா மாநாட்டில் அமைச்சின் செயலாளர் திரு அனுரா வீரரத்னவால் வலியுறுத்தப்பட்டிருந்தது. சைனா, இந்தியா, உருகுவே, நைஜீரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து அத்துமீறி மீன்பிடிக்கும் நாடுகளுக்கு எதிராக முறைப்பாடுடிப் புத்தகம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்திருந்தார். அக்கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இப்போது எடுக்கப்படுகின்றன.

தென் ஆசிய நாடுகளுக்கு இடையே அத்துமீறி மீன்பிடிப்போர் பற்றிய தகவல் பரிமாற்றத் திட்டமொன்றை ஆரம்பிப்பது குறித்து இந்தியா பங்களாதேஷ், மாலைதீவு பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளுடன் கடற்றொழில் அமைச்சு இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் திரு அனுரா வீரரத்னா தனது விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடு செல்ல பணம் கிடைக்கவில்லை; நஞ்சிடம் தஞ்சமானார்!

இளம் பெண்ணின் பரிதாபம்

[பண்டத்தரிப்பு]

வெளிநாடு செல்வதற்கு தமக்கு 12 ஆயிரம் ரூபா தந்து உதவுமாறு தமது மூத்த சகோதரியிடம் கேட்ட இளம் பெண் ஒருவருக்கு பணம் கிடைக்காமல் போகவே நஞ்சருந்து அந்நிலை தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் முளாயில் நடைபெற்றுள்ளது. முளாயைச் சேர்ந்த செல்வா குலமணி தேவி என்னும் 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர். இவரது மரண விசாரணை நீதிமன்ற விசாரணை அதிகாரியும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுமாகிய சேனாதிராசா ஜே.பி முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலம் சென்றவரின் மூத்த சகோதரியான தங்கராசலக்குமி அம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

காலஞ் சென்றவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர் தி. செல்வராசாவும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் தற்கொலையென்று தீர்ப்புவழங்கப்பட்டது. சடலம் காவல்துறை பொலிசார் ஆஜர் செய்தனர்.

மூன்றும் கட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் மூலம் மழை, வெயில், இரவு பகல் என்று பாராது வேலைசெய்வதற்கு போதிய இயந்திரங்களுக்குப் பாதுகாப்புமில்லை. இதனால் பெரும்பாலான விபத்துக்களால் காயமடைந்தாலோ அல்லது மரணமடைந்தாலோ நஷ்டஈடு வழங்கக்கூடியவகையில் சட்டப்படி பாதுகாப்பும் கிடையாது.

பெரும்பாலான இளைஞர்கள் அதிக அளவில் வந்து வேலைத்தளத்தில் தடுமாறுகின்றனர். இவர்களில் அதிகமானவர்களுக்குப் போதுமான முன் அனுபவம் கிடையாதென்றும் சொல்லப்படுகிறது.

மூன்றாவது கட்ட வேலைத்தளத்தில் வேலைக்கு ஆள் பிடிக்கப்பட்ட பின்னர் வேலைசெய்யும்போது காடிக் கட்டடத்திலிருந்து கீழே விழுந்து, மின்சாரத்தினால் தாக்கப்பட்டும் பலர் பலியானார்கள். ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்களில் இருபதுக்கும் அதிகமானவர்கள் இயங்க முடியாதநிலையில் உள்ளனர்.

குறிப்பிட்ட வேலைத்தளத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் வேலைசெய்வதால் வாகனப் போக்குவரத்து மற்றும் நஷ்டஈடு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

ஆர்ப்பாட்டம்

லண்டன், டிச. 18

கணு குடாவுக்கேற்ற நடைசெலவுமாறு கோரிச் சுமார் 10 ஆயிரம் மக்கள் நேற்றுக் கவிடனில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வெ

திருட்டுக்களை ஒழிக்க ஏற்பாடு

(சாவகச்சேரி)

செப்பியன்பற்று வடக்கில் அடிக்கடி நடைபெற்றுவரும் திருட்டுக்களை ஒழிக்கும் நோக்கமாக அப்பகுதிக்கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஊர்காவற்படையொன்றை நிறுவியுள்ளனர்.

இராக்காலங்களில் தினந்தோறும் தலா 25 பேர்கள் வீதம் மாறி மாறி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இரவிலே சந்தேகத்திற்கிடமானவர்கள் கொண்டுபோகப்படுகின்றார்கள் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

லயனல் குழு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கா. பொ. இரத்தினமும், யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரனும் விசாரணைக்குழுவுக்கு இன்று சாட்சியமளிக்கவுள்ளனர். (தா)

இப்படியும் நடக்கிறது

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் செயலாளராக இருப்பவர் திரு ஆர். பேரின்பநாயகம். சபாமுதலமைச்சரின் செயலாளராக இருப்பவர் திரு எஸ். கருணாரத்ன, சபை முதலவராக உள்ளவர் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா.

"திருவாளர்கள் பேரின்பநாயகமும், கருணாரத்னவும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அவசியம் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்" என்று பராளுமன்றத்தில் துணை தலைவர்கள் ஆதரித்துக் கூறியுள்ளனர்.

அந்த இருவர் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம்.

— ஊடுருவி

பாட்டா சப்பாத்துகள்
சகாய விற்பனை

தேர்வுக்கு முந்துங்கள்

எஸ். சின்னத்துரை அன் பிறதர்,
த. பெ. எண் 101, யாழ்ப்பாணம்.
போன்: 284

பிரான்ஸ் செல்வதற்கு
சகல ஒழுங்குகளும் செய்கிறார்கள்
இம்பீறியல் ட்ரவல் ஸ்தாபனத்தார்!
பிரான்சுக்குச் செல்வதற்கு
பாஸ்போட், விசா, விமானடிக்கட் போன்ற
சகல செலவுகளும் உட்பட 9300/- மட்டுமே

சிங்கப்பூர், மலேசியா போய்த் திரும்ப
விமான டிக்கட் கட்டணம் 6500/- மட்டுமே!

எல்லா விதமான பாஸ்போட் வேலைகளும்
உடனுக்குடன் கவனிக்கப்படும்.
விபரங்களுக்கு:
திரு. எஸ். பரக்கியராஜா
இம்பீறியல் ட்ரவல்
(முதலாவது மாடி),
51, முதலாவது குறுக்குத்தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி: 547031 (1721)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வேம்படிவீதி மேற்கு வீடு. 66-ம் இலக்கத்திலுள்ள "சனிக்கிழமை" பிரசுரமாகி, கொழும்பு 5, காசிச்செட்டித் வீதி, 805-ம் இலக்கத்திலுள்ள கலாநிதி அச்சகத்தில் 1981 டிசம்பர் 14-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered News Paper. The General P. O. Sri Lanka Reg. O. B. 100886/81. P. O. Box 494 Jaffna. தொலைபேசி 77707, 888, 8186.